# Chapter 7
# சான்றோர் மொழி

---

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

**கேள்வி** 1.
உரைத்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ______________________ .
அ) பாடுதல்
ஆ) வரைதல்
இ) சொல்லுதல்
ஈ) எழுதுதல்
**விடை:**
இ) சொல்லுதல்

**கேள்வி** 2.
ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் ______________________ .
அ) கொடுத்தல்
ஆ) எடுத்தல்
இ) தடுத்தல்
ஈ) வாங்குதல்
**விடை:**
அ) கொடுத்தல்

**கேள்வி** 3.
மிக்காரை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ______________________ .
அ) அறிவிலாதார்
ஆ) அறிந்தோரை
இ) கற்றோரை
ஈ) அறிவில்மேம்பட்டவர்
**விடை:**
அ) அறிவிலாதார்

**கேள்வி** 4.
இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள் ______________________ .
அ) பிறரிடம் கேட்டுப் பெறாது
ஆ) பிறரிடம் கேட்டுப் பெறுவது

இ) பிறரிடம் கொடுப்பது
ஈ) பிறருக்கு கொடுக்காது
**விடை:**
அ) பிறரிடம் கேட்டுப் பெறாது

**கேள்வி** 5.
சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ____________________ .
அ) தேடுதல்
ஆ) பிரிதல்
இ) இணைதல்
ஈ) களைதல்
**விடை:**
இ) இணைதல்

## பொருள்பட எழுதிப் படித்து மகிழ்க

**கேள்வி** 1.
என க்கு இனி ப்புபி டிக்கும்

**விடை:**
எனக்கு இனிப்பு பிடிக்கும்.

**கேள்வி** 2.
உழை ப்புஉ யர்வுத ரும்

**விடை:**
உழைப்பு உயர்வு தரும்.

**கேள்வி** 3.
மரம் வளர்ப்போ ம்ம ழைபெ றுவோம்

**விடை:**
மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.

**கேள்வி** 4.
சுத் தம்சு கம்த ரும்

**விடை:**
சுத்தம் சுகம் தரும்.


**கேள்வி** 5.
இனி யதமி ழில்பே சுங்கள்

**விடை:**
இனிய தமிழில் பேசுங்கள்.

## நீ எதை விரும்புவாய்? ஏன்? கலந்துரையாடுக.




**விடை:**




நான் மழைநீரை சேகரிப்பேன். அதனை செடிகளுக்குப் பாய்ச்சி பசுமையாக மாற்றுவேன். குழாயில் நீர் கசிவதையும், வீணாக வழிந்தோடுவதையும் விரும்ப மாட்டேன்.

## பக்கம் 43

செயல் திட்டம்



‘கல்வி’ என்ற அதிகாரத்தில் இருந்து எவையேனும் ஐந்து திருக்குறள்களைப் படித்து, எழுதி வருக.

**விடை:**

1) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

3) கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

4) உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

5) உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங்
கற்றார் கடையரே கல்லா தவர்.